# நல்ல நல்ல பாட்டு



பெ. தூரன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு: ஏப்ரல், 1965
உரிமை பதிவு

விலை: 2 ரூபாய்

சுதந்திர நிலைய வெளியீடு - 16

மாணிக்கம் பிரஸ், சென்னை-29

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| கோயில் மணி | ... | 5 |
| ஆயிரம் வேலை | ... | 6 |
| பூனை | ... | 8 |
| எனக்கும் பொம்மைக்கும் | ... | 9 |
| நத்தை | ... | 10 |
| சிறிதே பெரிது | ... | 11 |
| குருவியும் குழந்தையும் | ... | 12 |
| அன்பு செய் | ... | 13 |
| ஆடுமேய்க்கும் அண்ணு | ... | 14 |
| ரயில் வண்டி | ... | 16 |
| தேச சேவை | ... | 17 |
| எனக்கே ஆசையம்மா | ... | 18 |
| சூரியன் எங்கே | ... | 21 |
| எட்டுக் குட்டிப் பூனைகள் | ... | 22 |
| கேள்வி | ... | 23 |
| மாமரம் | ... | 24 |
| கோமாளிக் குப்பண்ணு | ... | 25 |
| காக்கையும் நத்தையும் | ... | 26 |
| நான் சிங்கம் | ... | 27 |
| தீபாவளிப் பட்டாசு | ... | 28 |
| கைகோத்து ஆடல் | ... | 31 |
| வாத்துக் குஞ்சுகள் | ... | 32 |
| எங்கள் கொடி | ... | 34 |
| மழைக்குப் பின் | ... | 35 |
| எங்கள் வீட்டுத் தோட்டம் | ... | 37 |
| நீலப் பெருங்கடல் | ... | 38 |
| கலாய்க்காரன் | ... | 40 |
| தவளை | ... | 41 |
| நிலா | ... | 42 |


| | | |
|---|---|---|
| மணல் இட்டலி | ... | 43 |
| காந்தி அண்ணல் | ... | 44 |
| குருவியும் பூனையும் | ... | 45 |
| சிட்டுக் குருவிகள் | ... | 47 |
| மின்னி மின்னி வானத்தில் | ... | 48 |
| வேலைக்காரி | ... | 49 |
| எனது ஆசை | ... | 51 |
| பூவே வா | ... | 52 |
| ஆகாய விமானம் | ... | 53 |
| மரவட்டை | ... | 54 |
| புது நாள் | ... | 55 |
| வீரக் கரிகாலன் | ... | 56 |
| தாடித் தாத்தா | ... | 59 |
| பொங்கல் | ... | 60 |
| எழுந்திரு கண்ணே | ... | 61 |
| குட்டியின் தந்திரம் | ... | 62 |
| நாட்டின் தந்தை காந்தி | ... | 63 |
| ஜெய் ஹிந்த் | ... | 64 |


## காணிக்கை

*மாமா பாட்டு வேணும், மாமா கதை வேணும் என்று பார்த்த போதெல்லாம் கேட்டு என்னை எழுதத் தூண்டும் அன்புச் சிறுமி,*

**கீதாவுக்கு**

# கோயில் மணி



டண் டண் டணர்
டண் டண் டணர்

கோயில் மணியும் முழங்குது
கும்பிடச் செல்வோம் வாருங்கள்

டண் டண் டணர்
டண் டண் டணர்

ஆண்டவன் நினைவை எழுப்புது
அன்பாய் நம்மை அழைக்குது

டண் டண் டணர்
டண் டண் டணர்




அம்மா எனக்கு வேலையும் இங்கே
ஆயிரம் உள்ளன
சும்மா நீயும் கூப்பிட்டுக் கூப்பிட்டுத்
தொல்லை கொடுக்காதே

பாலைக் குடிக்கவும் சடையைப் பின்னவும்
பத்துத்தரம் அழைத்தால்
வேலை யெல்லாம் கெட்டுப் போகுது
விளக்கிச் சொல்லவோ?

சுண்டாச் சட்டியில் என்றன் வீட்டில்
சோறு வேகுதம்மா
குண்டா என்ருெரு கிளிஞ்சல் நிறையக்
குழம்பும் ஆகுதம்மா

கடைக்குப் போன பையனே இன்னும்
காண வில்லேயே
வடைக்கு மணலே ஊற வைத்துளேன்
மாவும் அரைக்கவேணும்

பள்ளிக் கூடம் செல்லத் தம்பி
பறந்து வந்திடுவான்
வெள்ளித் தட்டில் அவனுக் குணவு
வேகமாய்ப் போடுமுன்ளுல்

எத்தனே வேலே என்று கூறிட
எனக்கு நேரமெங்கே?
இத்தனேக் கிடையில் கத்தும் குழந்தைக்கு
என்னதான் செய்வதம்மா?

# பூனை



பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
பொந்துக்குள்ளே போன எலியைப்
பிடிக்கப் பார்க்கிறேன்



பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
பிடியைத்தப்பிப் போன எலியைத்
தேடிப் பார்க்கிறேன்



பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
போன எலியும் திரும்புகின்ற
நேரம் பார்க்கிறேன்



பூனையாரே பூனையாரே
என்ன செய்கிறீர்?
பார்த்த கண்ணும் பூத்துப்போச்சு
தூங்கப் பார்க்கிறேன்.




எனக்கும் பொம்மைக்கும் சண்டையம்மா
ஏனோ என்றுநீ கேளாதே
உனக்கும் விளங்கச் சொல்லவே
ஓகோ என்றால் ஆகாதே

குளிக்கக் கூப்பிட்டால் ஓடிவிடும்
குப்புறக் கிடந்தே தேம்பியழும்
அழுக்குச் சட்டையை மாற்றிடவே
ஆயிரம் ஆயிரம் தொல்லைதரும்

மண்ணைத் தலையில் போட்டுக் கொள்ளும்
வாயைத் திறக்காது பாலைக்கண்டால்
என்னென்ன பாடு படுத்துதென்னை-
எனக்கும் பொம்மைக்கும் சண்டையேதான்.

# நத்தை




நத்தையாரே நத்தையாரே
அத்தை வீடு பயணமோ?
அத்தை வீடு போக முதுகில்
தண்ணீர்க் குடம் வேணுமோ ?

அத்தையார்க்கு நீர் சுமக்கும்
நத்தையாரே வாருங்கள்!
மெத்த வழியில் நீரும் சிந்தும்
மெல்ல மெல்லச் செல்லுங்கள்!




சின்னச் சின்னத் துளிகள் சேர்ந்தால்
பெரிய பெரிய ஆறே ஆகும்
சின்னச் சின்னச் செங்கல் சேர்ந்தால்
பெரிய பெரிய வீடே ஆகும்.

சின்னச் சின்ன நல்ல பேச்சால்
பெரிய பெரிய இன்ப மாகும்;
சின்னச் சின்ன உதவி செய்தால்
பெரிய பெரிய இன்ப மாகும்.



# குருவியும் குழந்தையும்

குழந்தை :

"குருவீ குருவீ கூடெங்கே?
கொஞ்சிப் பேசுங் குஞ்செங்கே?"

குருவி :

"மறைவாய் ஆங்கோர் கூரையிலே
வைக்கோல் கொண்டொரு கூடுசெய்தே
பஞ்சும் இறகும் போட்டதிலே
பாங்காய் மெத்தையும் செய்தங்கே
குஞ்சுகள் ரண்டையும் காத்திடுவேன்
கூட்டின் பக்கம்நீ போகாதே"

குழந்தை :

"குருவீ குருவீ சொல்எனக்கே
கூடும் குஞ்சும் எங்கென்றே"

குருவி :

“பாப்பா நீயும் தேடாதே
பச்சிளங் குஞ்சுகள் பயம்அடையும்
காப்பாய் நீயென எப்படிநான்
காண்பேன் எனக்கே சொல்வாயே”

குழந்தை :

“குருவீ குருவீ பயமேனோ?
குஞ்சுங் கூடும் காப்பேன் நான்
அருகே பூனைகள் வந்தாலும்
அதட்டியே ஓட்டுவேன் அஞ்சாதே”

## அன்பு செய்

கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்
குஞ்சும் குஞ்சும் கதறிப்
பஞ்சம் பஞ்சம் அதனால்
தஞ்சம் தஞ்சம் என்றால்
கொஞ்சம் கொஞ்சம் இளகா
நெஞ்சம் மிஞ்சும் கல்லே.

# ஆடு மேய்க்கும் அண்ணா



ஆடு மேய்க்கும் அண்ணா—உன்றன்
கூட நானும் வருவேன்
காடு மேடும் சுற்றி—நல்ல
காட்சி காண வேணும்.

துள்ளி ஓடும் ஓடை—அதில்
சோம்பிப் படுக்கும் எருமை
குள்ள வாத்துக் கூட்டம்—வெள்ளைக்
கொக்கும் அங்கு காண்பேன்.

பச்சை அலைகள் போலே—அசையும்
பயிர்கள் வளரும் வயல்கள்
உச்சிக் கிளையில் கொஞ்சும்—அருமைப்
பச்சைக் கிளியும் பார்ப்பேன்.

அரச மரத்தின் கனியை—உண்டு
அழகாய்ப் பேசும் மைனா
கரிய குயிலின் பாட்டை—நன்கு
காதிற் கேட்டு மகிழ்வேன்.

காட்டுச் செடியும் கொடியும்—பற்றி
ஆட்டுக் குட்டி தின்ன
ஓட்ட மாகச் சென்றே—பெரிய
உதவி நானும் செய்வேன்.

# ரயில் வண்டி



அம்மா நானோர் ரயில்வண்டி
ஆகா ஜோராய்ச் செல்வதைப்பார்
சும்மா நீயும் வந்திடலாம்
சுற்றியே எங்கும் பார்த்திடலாம்

‘குப்குப் குப்குப்’ போகுதுபார்
குமுறியே புகையும் பொங்குதுபார்
‘ஜக்ஜக் ஜக்ஜக்’ போகுதுபார்
‘தடதட கடகட’ ஓடுதுபார்

பச்சைக் கொடியைக் காட்டியதும்
பலமாய்க் கூவிப் போகுதுபார்
இச்சைப் படிநீ சென்றிடலாம்
ஏறுவாய் அம்மா மணியாச்சு

கைகளை மாற்றியே ஆட்டிடுவேன்
கவனமாய் நானும் சென்றிடுவேன்
கையும் தணிந்தது வந்திடம்மா
காற்றாய் நானும் பறந்திடுவேன்.



# தேச சேவை

தேச சேவை செய்யவே
சேர்ந்தெழுந்து நின்றுளோம்
ஆசை எங்கள் வாழ்விலே
அன்னை சேவை சேவையே — தேச சேவை

அரிய செயல்கள் யாவையும்
ஆர்வங் கொண்டு செய்குவோம்
பெருமை என்றும் ஓங்கவே
பெரிய எண்ணம் கொள்ளுவோம்-தேச சேவை

ஜாதி பேதச் சிறுமைகள்
சமய வாதப் பிரிவுகள்
ஏதும் இந்த நாட்டிலே
இல்லை என்று போக்குவோம் - தேச சேவை

மாந்தர் ஒன்று கூடியே
வாழ்வில் இன்பம் எய்தவே
சாந்தி எங்கும் பொங்கவே
சத்யம் அன்பு நாட்டுவோம் - தேச சேவை




என்று முன்றன் மடியில் இருக்க
எனக்கே ஆசையம்மா
இருந்த போதும் பூவாய் மாறிட
ஏங்குவ துண்டம்மா
கொன்றை மரத்தில் கொத்தாய்ப் பூத்துக்
குலுங்கி நானிருப்பேன்
கொஞ்சமும் தயக்கம் இன்றியே நீயும்
பறிக்க வந்திடுவாய்

காலையில் குளித்து வெள்ளித் தட்டுடன்
கடவுளைப் பாடி
கனிந்து வந்து மலரை எடுக்கக்
கண்டு நான் நகைப்பேன்

மூலே அறையில் இறைவன் பதத்தில்
என்னையும் வைப்பாயே
முத்து முத்தாய்க் கண்ணீர் சிந்தத்
தொழுது நிற்பாயே


ஆசை மைந்தன் ஓங்கி வளர
அருள்க என்பாயே
அன்னாய் அதனைக் கேட்டு நானும்
அகமகிழ்ந் திடுவேன்
பூசை முடிந்து வெளியில் வந்தே
என்னைக் கூப்பிடுவாய்
புகுந்து புகுந்து அறைகள் எல்லாம்
தேடிப் பார்த்திடுவாய்

எங்கே எங்கே கண்ணே வாடா
என்றே நீ துடிப்பாய்
எனக்குச் சிரிப்புப் பொங்கி வந்திடும்
என்றாலும் நானும்
மங்கா தங்கே இறைவன் பதத்தில்
மகிழ்ந்திருப் பேனே
மனத்தில் துயரம் ஓங்க நீயும்
வருவாய் கடவுள் முன்

கந்தா கண்ணா என்றன் மகவைக்
காப்பாற்றிக் கொடுப்பீர்
காலில் விழுந்தேன் என்றே அலறி
நொந்தே நீ விழுவாய்

அந்தோ உன்றன் துயரம் கண்டும்
மறைந்திருப் பேனோ
அழகுக் கொன்றை உருவம் நீங்கி
முன்னுல் தோன்றிடுவேன்


ஆகா கடவுள் அருள் என்றெண்ணி
எடுத்துக் கொஞ்சிடுவாய்
அற்புதம் அற்புதம் இறைவன் கருணை
என்றே பாடிடுவாய்
பாகாய் உருகும் உன்றன் உளத்தைப்
பார்த்துன் குழந்தை நான்
பண்ணிய புண்ணியம் பெரிதென்றெண்ணி
வந்தனை செய்திடுவேன்.






சூரியன் எங்கே சொல்லம்மா
தூங்கி எழுந்தபின் வருமோசொல்
ஏரியில் எங்கும் விளக்கில்லை
எப்படி மீன்கள் நீந்திடுமோ?

துள்ளியே ஆடும் அலைகளுக்கே
தூக்கம் என்றுமே கிடையாதோ?
வெள்ளி நிலாவும் பந்தல்ல
மெல்லவே ஓடமாய் வருவதும்ஏன்?




# எட்டுக் குட்டிப் பூனைகள்

எட்டுக் குட்டிப் பூனைகள்
குட்டை குட்டை யானவை
அட்டைப் பெட்டிப் பொந்தினுள்
முட்டி முட்டிப் பார்த்தன

அட்டைப் பெட்டி யதனிலே
பட்டுச் சட்டை மறைவிலே
குட்டிக் குட்டிச் சுண்டெலி
எட்டி எட்டிப் பார்த்தது


கிட்டக் கிட்டப் பெட்டியுள்
குட்டைக் குட்டிச் சுண்டெலி
வட்ட மிட்டுச் சட்டென
எட்டி வெளியில் பாய்ந்தது

குட்டி எட்டும் திடுக்கிட்டே
குட்டிக் கரண மிட்டதால்
எட்டிப் பிடிக்கத் தாவுமுன்
குட்டி எலியும் மறைந்ததே!





# கேள்வி



என்னைக் கண்ணே தங்கம்என்றே
எப்பவும் கூப்பிடும் அம்மா நீ
கன்றுக் குட்டிதன் அம்மாவைக்
கத்தியே அம்மா என்றழைக்கும்

ஆனால் கன்றினை அதனம்மா
அம்மா என்றே அழைக்குதம்மா !
ஏனோ இப்படி என்றெனக்கே
இப்போ விளக்கிச் சொல்லம்மா !

# மாமரம்



மாசி மாதம் பூவும் பிஞ்சும்
மகிழ்ந்து நீயும் பார்த்து நின்றாய்
பங்குனி மாதம் பச்சைக் காய்கள்
பல்லுக் கூசிட நீயும் தின்றாய்
சித்திரை மாதம் தேனாய்ப் பழுத்தேன்
சின்னப் பாப்பா உண்ண வாவா
ஒட்டு மாம்பழம் உனக்குப் பிடிக்கும்
உண்ண வாவா சின்னப் பாப்பா!

# கோமாளிக் குப்பண்ணா




"கோமாளி அண்ணா குப்பண்ணா
குடமே போலொரு வயிற்றண்ணா
ஏமாளி யிங்கே யாரண்ணா
எனக்குக் கொஞ்சம் சொல்லண்ணா"

"பாடு படுபவன் பாட்டாளி
பகையே செய்பவன் பகையாளி
கூடி உழைப்பவன் கூட்டாளி
குணமே கெட்டவன் ஏமாளி

சொல்லைக் காப்பவன் சொல்லாளி
தொழிலைச் செய்பவன் தொழிலாளி
வில்லில் தேர்ந்தவன் வில்லாளி
வீணாய்த் திரிபவன் ஏமாளி"



# காக்கையும் நத்தையும்



“நல்ல நத்தை மாமியே
நானே காக்கைக் கொத்தனும்
கல்லும் மணலும் இன்றியே
கட்டடம் கட்ட வல்லவன்.

மச்சு வீடு வேணுமோ
மாடி வீடு வேணுமோ
குச்சு வீடு போதுமோ
கூரை வீடு போதுமோ ?

பார்க்க இங்கு வந்திடில்
படமும் போட்டுக் காட்டுவேன்
ஆர்க்கும் ஆசை விளையுமாம்
அப்படி அழகு மாளிகை.”

“மூக்கை மூக்கை நீட்டியே
நாக்கில் உண்மை இன்றியே
காக்கை நீயும் என்னையும்
ஏய்க்கப் பேச்சுப் பேசிடேல்;

அத்தை அத்தை என்றிடும்
எத்தன் நீயும் அல்லவோ?
சுத்தப் பொய்யன் என்பதை
நித்தம் நானும் கண்டுளேன்.

முதுகுக் கூடு போதுமே
மூன்று மாடி எதற்கடா?
உதவி யந்தக் கூடுதான்
ஓடிப் போடா மூடனே."

## நான் சிங்கம்

அம்மா சிங்கம் நான்தானும்
ஆட்டுக் குட்டியும் நீதானும்
சும்மா கர்ஜனை செய்திடுவேன்
சுற்றிலும் பார்த்துநீ கதறிடுவாய்..

பாய்வேன் நானுன் முதுகின்மேல்
பயப்பட வேண்டாம் விளையாட்டே!'
தாய்மேல் என்றும் அன்புசெயத்
தவறிடு வேனோ சொல்லம்மா?



# தீபாவளிப் பட்டாசு

பாவாடை ரவிக்கை அணிந்து
பூனைக் குட்டி வந்ததாம்
பச்சைக் கோட்டுக் குல்லாப்போட்டு
நாய்க் குட்டியும் வந்ததாம்
காவாமல் வீட்டை விட்டுக்
கடைகள் உள்ள வீதியில்
காசுப் பையைக் கையில்மாட்டிக்
குட்டி ரண்டும் நடந்தன

பட்டணத்தைச் சுற்றிச் சுற்றிக்
கடைகளெல்லாம் பார்க்கணும்
பலவிதமாய்த் தீவாளிக்குத்
துணியும் மணியும் வாங்கணும்
பட்டாசும் பறக்கும் வாணம்
தம்பிக் கண்ணுக்கு வாங்கணும்
பட்டுச் சொக்காய் ஜரிகைவேட்டி
மாப்பிள்ளைக்கு வாங்கணும்

ஊசிவெடியும் சங்குச் சக்கரம்
தங்கச்சிக்கு வேணுமாம்
ஓலை வெடியும் கம்பிவாணம்
கூடை நிறைய வேணுமாம்
வீசிப் பொறிகள் மின்னும் வாணம்
அனைத்தும் வாங்கி வண்டியில்
வீடு செல்ல முதலில் பட்டாஸ்
கடைக்குக் குட்டிகள் சென்றன.

பைய ஒருவன் குறும்பாய் அருகில்
ஆனை வெடியைக் கொளுத்தினன்
படா ரென்று அதுவும் வெடிக்கப்
பயந்து கதறிக் குட்டிகள்
கையும் காலும் நடுங்க நடுங்க
வீட்டை நோக்கிப் பாய்ந்தன
காசுப் பையும் போன தெனினும்
தப்பிப் பிழைத்தோம் என்றன.


கை கோத்து
ஆடல்

மாலைப் பொழுதும் சாய்ந்தவுடன்
மனையின் முன்றல் வாசலிலே


கோலம் இட்டதில் அழகாகக்
குத்து விளக்கை ஏற்றிவைத்து

பத்துச் சிறுமிகள் நாமெல்லாம்
பாங்காய்ச் சுற்றிலும் கை கோத்து

தத்தா தாதை தையென்றே
நர்த்தன மாடி மகிழ்ந்திடுவோம்


தாதை தைதா தித் தைதா
தாதை தைதா தித் தைதா

தத்தா தாதை தையென்றே
நர்த்தன மாடி மகிழ்ந்திடுவோம்




# வாத்துக்குஞ்சுகள்

பத்து வாத்துக் குஞ்சுகள்
அத்தை வீடு சென்றன
கத்திக் கத்தி வழியிலே
மெத்தக் காவல் வேண்டின



கன்றுக் குட்டி மூன்றுடன்
கழுதைக் குட்டி ரண்டுமே
ஒன்றுக்கொன்று போட்டியாய்
ஓடிக் காவல் புரிந்தன


குள்ள நரியும் வந்தது
குறுகிக் கூனிப் பார்த்தது
கள்ளப் பார்வை கண்டுமே
கதறிக் குஞ்சுகள் கூவின



எட்டி உதைக்கக் கால்களை
மெட்டிக் கழுதைக் குட்டிகள்
தட்டி வீசிடக் கன்றுகள்
முட்டிப் பாய வந்தன

பார்த்து நரியும் அஞ்சியே
பதைத்து நடுங்கி உடம்பெலாம்
வேர்த்துக் காட்டில் புகுந்துமே
வேகமாக மறைந்ததே

அஞ்சு குட்டித் துணையுடன்
குஞ்சு பத்தும் சென்றன
நெஞ்சு குளிர அத்தையும்
கொஞ்சி விருந்து வைத்ததே.





ந—3




வாழ்க எங்கள் மணிக்கொடி
வாழ்க எங்கள் இந்தியா —
வீழ்க தீமை யாவையும்
வெற்றி என்றும் ஓங்கவே.

எங்கள் நாட்டின் கொடியிது
என்றும் ஓங்கி நிற்கவே
பொங்கும் அன்பில் கூடிநாம்
புரிவோம் நல்ல சேவையே.

சொந்த நாட்டின் கொடியினை
சூழ்ந்து நின்று யாவரும்
எந்த நாளும் காத்துமே
இன்ப மெய்தி வாழுவோம்.




வானம்இருண்டு மழைபெய்து ஓய்ந்தது
வாருங்கள் ஓடி விளையாடுவோம்
மேனிகுளிரவே மாநிலத் தாய்இங்கு
வெள்ளத்தில் ஆடிச் சிரித்துநின்றாள்

வீதியில் ஓடி வருகின்ற நீரினை
வேகமாய்க் கட்டித் தடுத்திடுவோம்
பாதையைத் தள்ளியோர் சின்னக்குளம்வெட்டிப்
பாங்குடன் வெள்ளத்தைத் தேக்கிடுவோம்

புத்தம்புதிய தோர் பச்சைநிறம் போர்த்துப்
பூவரச மரம் நிற்பதைப் பார்
முத்துத்துளி கோத்து மின்னும்இலையுடன்
முன்நிற்கும் மாமரக் கூட்டத்தைப்பார்

மாலைக் கதிரவன் பொன்னொளி தூவியே
மங்களம் கூட்டி மகிழ்ச்சி கொண்டான்
கோலமாயெங்கும் இளமை செழித்தது
கூடியே ஆடிட வாருங்களே.


எங்கள் வீட்டுத்
தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டம்—அதற்கு
எத்தனை பறவை வருமோ!
மஞ்சள் மூக்கு மைனா—இரண்டு
வந்து பூச்சி பிடிக்கும்


சிட்டுக் குருவி பத்து—மணலில்
தினமும் முழுகிக் குளிக்கும்
பெட்டைக் கோழி ஒன்று—குஞ்சைப்
பிரியமாகக் காக்கும்

சின்னஞ் சிறிய சிட்டு—பூவின்
தேனைக் குடிக்கும் சிட்டு
கன்னங் கரிய சிட்டு—அதுவும்
காலைப் பொழுதில் வருமே

பச்சைக் கொன்றைக் காயைப்—பறித்துப்
பவழ வாயில் தின்னும்
பச்சைக் கிளியின் கூட்டம்—புதரில்
பறந்து பறந்து மறையும்

அழகுக் கொண்ட லாத்தி—தரையை
ஆணி மூக்கால் குத்திப்
புழுவைத் தேடி யுண்ணும்—மெதுவாய்ப்
பூனை வந்தால் பறக்கும்

எங்கள் வீட்டுத் தோட்டம்—அதிலே
எத்தனை எத்தனை பறவை!
அங்கு நானும் செடியின்—மறைவில்
அவற்றைப் பார்த்து மகிழ்வேன்.



# நீலப்பெருங்கடல்

பரந்த நீலக் கடல்பாராய்—அதைப்
பார்க்கப் பார்க்க மகிழ்வோங்கும்
தெரிவதும் இக்கரை ஒன்றேதான்—பிற
திசைகள் எல்லாம் தண்ணீரே !

கண்ணுக் கெட்டாத் தொலேவினிலே—விரி
கடலினை வானம் தொடுவதுபார்
வெண்ணுரை பொங்கச் சுருள்அலைகள்—பல
விதமாய்ப் புரளும் கோடி அவை

ஒன்ருய் நாகம் பலகூடிப்—படம்
உயர்த்திக் கரையை மிகச் சீறி
நன்ருய்த் தாக்கிட வருவனபோல்—எந்
நாளும் வருமெழில் என் சொல்வேன்!


அரவம் ஓயா அலைகளவை—அணி
அணியாய் எழுந்தே உருண்டு வரும்
பரதவர் பலபேர் கட்டுமரம்—தனில்
பாய்ந்தே ஏறிச் சென்றிடுவார்

பாதைகள் இல்லா நீர்ப்பரப்பில்—அவர்
பாயை விரித்தே நாள்தோறும்
காதம் பலசென் றந்தி யிலே—இக்
கரை சேர்ந்திடுவார் மீன்களுடன்

கடல்மென் காற்றின் சுகம்நாடி—மணற்
கரைமீ தமர்வோர் மீனவரின்
உடலின் உழைப்பைக் கண்டங்கே—மிக
உள்ளங் கனிந்தே பார்த்திடுவார்.

நீலக் கடலே மீனவரை—நன்கு
நித்தங் காக்கும் தாயாகும்
கோலக் கடலின் வளம் ஒன்றே—அதைக்
கும்பிட் டெழுவார் அம் மக்கள்

உப்பைத் தருவது கடல்தானே—விலை
உயர்முத் தருள்வது கடல்தானே
வெப்பம் தணிவதும் கடலாலே—மழை
மேகம் தருவதும் கடலேதான்.




ஈயம் பூசும் கலாய்க்காரா
என்றன் வீட்டிற் குள்ளே வா
ஞாய மாகக் கூலி கேட்டால்
நானும் கொடுப்பேன் சாமான்கள்

சின்ன வீட்டைக் கண்டுநீ
சிரிக்க வேண்டாம் வந்துபார்
என்ன என்ன சாமான்கள்
எத்தனை எத்தனை என்றுபார்

சுண்டாச் சட்டிகள் நான்குண்டு
சோற்றுத் தட்டமாம் ஓடுண்டு
அண்டா, குண்டா உண்டிங்கே
அடுக்குப் பாத்திரம் கிளிஞ்சல்தான்


குருவிச் செப்புகள் மூன்றுண்டு
கூடை முறமும் உண்டுபார்
வரவும் உனக்குத் தடையுண்டோ?
வந்தே ஈயம் பூசுவாய்

சும்மா நின்று நீயும்தான்
சுற்றிலும் ஏனோ பார்க்கிருய்?
அம்மா தந்தவை போதுமா,
அவைகள் என்ன தங்கமா?

## தவளை



தத்தித் தத்தித் தவளைகள்
பத்துப் பத்து நூறென
கத்தித் கத்தி வந்தன:
குத்திக் குத்திக் காதுகள்
'பொத்துப் பொத்துப் போகுமுன்
'பொத்திப் பொத்திக் கொண்டனன்.




வட்ட வட்டத் தட்டு நிலா
வானத்திலே மிதக்கும் நிலா
எட்டிஎட்டி மேகத் திரையில்
என்னைப் பார்க்கும் தங்க நிலா
பொட்டுப் போலத் தோன்றும் நிலா
பொங்கும் பாலைப் போன்ற நிலா
முல்லைப் பூவைப் போன்ற வெள்ளை
முத்துச்சுடரை வீசும் நிலா
எல்லை யில்லா வீதி வழியே
இன்ப மாகப் போகும் நிலா.




லொட்டு லொட்டு லொட்டு லொட்டுக்.
கொட்டாங் கச்சி இட்டலி
வட்ட வட்ட இட்டலி
மணலைக் கொண்டு இட்டலி
வாசல் வெளியில் இட்டலி
மழைக்குப் பின்னால் இட்டலி
கல்லில் தட்டி இட்டலி
காசுக் கெட்டு இட்டலி
அக்கா சுட்ட இட்டலி
அடுப்பில் லாமல் இட்டலி
தம்பி தொட்ட இட்டலி
தரையில் தட்டும் இட்டலி
லொட்டு லொட்டு லொட்டு லொட்டுக்.
கொட்டாங் கச்சி இட்டலி !



# காந்தி அண்ணல்

உண்மை பேசும் காந்தியாம்
உலகம் புகழும் காந்தியாம்
அன்பு பேசும் காந்தியாம்
அண்ணல் தம்மைப் போற்றுவோம்

எங்கள் நாட்டு விடுதலை
எமக்குத் தந்த காந்தியாம்
பொங்கும் அன்பு காந்தியாம்
புனிதன் மொழிகள் போற்றுவோம்

உலகம் ஒன்று சேரவே
உயர்ந்த வழிகள் கூறிடும்
பலரும் போற்றும் காந்தியாம்
பாரதத்தின் தந்தையாம்

உண்மை பேசும் காந்தியாம்
உலகம் புகழும் காந்தியாம்
அன்பு பேசும் காந்தியாம்
அண்ணல் தம்மைப் போற்றுவோம்.



# குருவியும் பூனையும்

குருவி :

பூனையாரே பூனையாரே
பதுங்குவ தேனய்யா?
புன்னைமரத்தில் வேலையும்
என்ன புரியச்சொல்வீரே

பூனை :

கொண்டைக் குருவீ கொண்டைக் குருவீ.
கோபங் கொள்ளாதே
குட்டிப் பூனைகள் பசியால்அழுதன
பாலுக்கு வந்தேனே

குருவி :

பூனையாரே பூனையாரே
உச்சிக் கிளைமீதில்
பூவுக்குள்ளே மாடுகறக்குதோ
பொய்யேன் சொல்கின்றீர்?

பூனை :

கொண்டைக்குருவீ கொண்டைக்குருவீ
கோபங் கொள்ளாதே
கூவுங்கோழியின் குஞ்சுக்கிங்கே
தண்ணீர்தேடி வந்தேன்

குருவி :


பூனையாரே பூனையாரே
புன்னை மரத்தின்மேல்
பொங்கியே ஊற்று வருவதுமுண்டோ
அதிசயம் அதிசயமே !

பூனை :

கொண்டைக்குருவீ கொண்டைக்குருவீ
கோபங் கொள்ளாதே
கூடியேநாமும் ஆடலாம்என்றே
கூப்பிட வந்தேனே

குருவி :


பூனையாரே பூனையாரே
வணக்கம் ஐயாவே
புரிந்துகொண்டேன் இனிமேல்
நில்லேன் போய்வருகின்றேனே.





# சிட்டுக் குருவிகள்

எட்டே எட்டுச்
சிட்டுக் குருவிகள்
கட்டாந் தரையில்
கொட்டிய மணலில்
ஒட்டாய் அமர்ந்து
வட்டமாய்க் கூடிச்
சிட்சட் என்றே
சட்டங்கள் எல்லாம்
வெட்டெனப் பேசித்
தொட்டே மூக்கில்
பட்டுடல் கோதித்
திட்டமாய் மணலில்
முட்டியே முழுகிக்
கொட்டங்கள் அடித்து
எட்டியே பார்த்துச்
சட்டெனப் பறந்தன.



# மின்னி மின்னி வானத்தில்

மின்னும் மின்மினி போலவே
  மின்னி மின்னி வானத்தில்
என்னை உற்றுப் பார்த்திடும்
  சின்னச் சின்ன மீன்களே
என்ன அங்கே செய்கின்றீர்?
  எப்படித் தான் நிற்கிறீர்?
அன்னை கழுத்தில் அணிந்திடும்
  அழகு வைர மாலையில்
மின்னும் மணிகள் போலவும்
  வெள்ளை முத்தைப்போலவும்
பொன்னுப் பூவைப் போலவும்
  மின்னிச் சிரிக்கும் மீன்களே
எட்ட நின்று பார்க்கிறீர்
  இரவில் மேலே வருகிறீர்
பட்டப் பகலில் எங்குதான்
  பறந்து செல்வீர் கூறுங்கள்.

# வேலைக்காரி



வேலைக் காரி நான்தான்
வீடு தினமும் பெருக்குவேன்
பாலைக் குடிக்கப் பூனையும்
பதுங்கி வந்தால் விரட்டுவேன்

கோலம் அழகாய்ப் போடுவேன்
கொஞ்சிக் குழந்தை தன்னையே
காலில் ஊஞ்சல் ஆட்டுவேன்
கதைகள் எல்லாம் சொல்லுவேன்

அப்பா அம்மா துணிகளை
அலசித் துவைத்து உலர்த்துவேன்
தப்பே ஏதும் செய்திடேன்
தண்ணீர் எடுத்து நிரப்புவேன்

பழைய சாதம் அம்மாதான்
பார்த்துத் தந்தால் உண்ணுவேன்
பழங்கள் எதையும் தோட்டத்தில்
பறித்து மறைவாய்த் தின்றிடேன்

அம்மா கேட்டதும் அப்பாவும்
அழைத்துச் செல்வார் படம்பார்க்க
சும்மா வீட்டை எறிந்துமே
சோடி போட்டுச் செல்லுவார்

என்ன இந்த அம்மாதான்
யாரையும் உடனே நம்புவார்
சொன்ன தெல்லாம் உண்மையோ
சுத்தமாய் அம்மா குழந்தைதான்.

நாட்டில் நடக்கும் திருட்டெலாம்
நாளும் எடுத்துச் சொல்வதும்
வீட்டைக் காவல் புரிவதும்
வேலை எனக்குத் தானிங்கே.





காற்றில் பாய்ந்து செல்லுவேன்
கடலும் மலையும் தாண்டுவேன்
ஆற்று வெள்ளம் தன்னையே
அணைகள் கட்டித் தேக்குவேன்

பாட்டும் கலையும் பயிலுவேன்
பசியும் பிணியும் போக்குவேன்
நாட்டின் செல்வம் ஓங்கவே
நல்ல பணிகள் ஆற்றுவேன்


வீரம் அன்பு சத்தியம்
வெல்க என்று போற்றுவேன்
பாரில் இவைகள் எங்குமே
பரவ என்றும் நாடுவேன்

உலகம் ஒன்று கூடியோர்
உயர்ந்த குடும்பம் ஆகவும்
நலங்கள் பெற்று வாழவும்
நானும் உழைப்பேன் என்றுமே.



# பூவே வா

சின்னஞ் சிறு மணிப் பூவே
சிங்காரம் செய் தெழுவாய்
இன்னல் தரும் பனியெல்லாம்
இல்லை இனித் தொல்லையில்லை;.
நல்ல வெய்யில் சிரித்திருக்கும்
நாளும் வந்து சேர்ந்ததுவே
மெல்லிசையில் குயில் பாடும்
விளையாடித் தென்றல் வரும்
பொங்கும் எழில்புது வசந்தம்
இங்கு வந்து நடனமிடும்
தங்கிய நல் லின்பம் வளர்
தருணமிது காணையோ
சின்னஞ் சிறு மணிப் பூவே
சிங்காரம் செய் தெழுவாய்.




# ஆகாய விமானம்

இறகடித்தல் இன்றியே
எழுந்து வானில் செல்லுவேன்
பறவை போல நீந்துவேன்
பார்த்து நீங்கள் மகிழவே

மின்னல் போல வேகமாய்
விரைந்து பறக்கும் பொழுதிலும்
என்னுள் மக்கள் பலரையே
ஏற்றிச் சுமந்து செல்லுவேன்

வரண்ட பாலை யதனையும்
மலையும் கடலுந் தாண்டுவேன்
இரண்டு நாளில் பாதிஉலகம்
ஏக என்னால் முடியுமே

நீல வானில் பறப்பதும்
நீண்ட தொலைவு செல்வதும்
நாளும் என்றன் இன்பமாம்
நல்ல குழந்தை நீயும்வா.




# மரவட்டை

மரவட்டைப் பெண்ணே வாவாவா
மழையும் வந்தது வாவாவா
சுருள்வட்ட மிட்டே படுக்காதே
துளியும் பயமே கொள்ளாதே.

ஆயிரம் ஆயிரம் சிறுகால்கள்
ஆரே உனக்குத் தந்தவர்கள்?
ஆயிரங்காலில் முள் தைத்தால்
அய்யோ எத்தனை நோவாகும்!

உருக்குச் சக்கர ரயிலைப்போல்
ஒழுங்காய்த் தரைமேல் செல்கின்றாய்
செருப்புச் சோடுகள் வேண்டாவோ?
சின்னக் கால்களும் வலியாவோ?




புதுநாள் வேறொன்று பிறந்தது பார்
பொழுது புலர்ந்தே எழுந்தது பார்.
இதையும் வீணாய்க் கழிப் பாயோ?
எதுவோ நல்லது செய் வாயோ?

எங்கோ இருந்தொரு நாள் வருமே
எங்கோ அதுவும் மறைந் திடுமே;
தங்கா ததுவும் போய் விடுமே
தடுத்தே நிறுத்திட முடிந் திடுமோ?

போன நாள் மீண்டும் வருமோ சொல்
போனது போனதே அன்றோ சொல்.
ஆனதோர் அருஞ்செயல் இன்றே செய்
அதுவே நாளிதன் பயனா கும்.



# வீரக்கரிகாலன்

கரிகாலன் பெருவளத்தான்—வற்றாத
காவிரிக்குக் கரையிட்டு வளம் கண்டவன்
அரிதான வீரம் மிக்கவன்—அவன்தான்
ஐம்மூன்று வயதினில் செய்த போரினால்

இறவாத புகழும் கொண்டான்—மக்களெல்லாம்
எண்ணியென்றும் வியப்பெய்த வன்மை காட்டினான்
சிறுபையன் என்று வேளிர்கள்—பெரும்படை
திரட்டியே வெண்ணியிலே போரும் தொடுத்தார்

பங்கு பெறப் பாண்டியனும்—சேரனும்
படையுடன் வந்து சேர்ந்தார் வேளிருடனே
எங்குமவர் வீரர் நிற்பதைக்—கரிகாலன்
இருகண்ணுல் பார்த்தும் மனம் கலங்கவில்லை

சோழர் படை முன்னணியிலே—காளையவன்
தோன்றிச்சிங்கம் போல நின்ருன் கையில் வாளுடன்
ஆழியலை போலப் பகைவர்—ஈட்டிகொண்டு
ஆர்ப்பரித்துத் தாக்கவந்தார் நம்பிக்கையுடன்

இப்பெரும் படைக்கு முன்புநாம்—நின்றிங்கு
எப்படித்தான் வெல்வதென்று சோழ வீரரும்
செப்பிமனம் குழம்பி விட்டார்—அவரெலாம்
சிந்தைதுணி வெய்தக்கரி காலனும் பாய்ந்தான்

மின்னலென்று வாள்வீசினன்—பகைவரை
வெட்டிவெட்டிச் சாய்த்துப் பரி மேலே தோன்றிடும்
வன்ன மயில் வாகனனைப்போல்—கரிகாலன்
வட்டமிட்டுத் தீக்கொழுந்தாய் எங்குமிருந்தான்

தன்படையை ஊக்கிப் பேசினான்—அவன்தன்
சாகசத்தைக் கண்டவரும் வீரிட்டெ ழுந்தார்
வந்தபகை வெள்ளத்தை யெல்லாம்—எலிகளை
மாய்க்கும் பாம்பு போலவீழ்த்தித் தோள்கொட்டினார்

கரிகாலன் தாக்கு மிடத்தில்—பகைவர்கள்
காற்று முன்னே பஞ்செனவே பறந்தொழிந்தார்
ஒருசிறு பையனென்று நாம்—எண்ணியிங்கு
ஒன்றுகூடி வந்தபிழை என்று மொழிந்தார்

வேளிர்களும் மருண்டு விட்டார்—பாண்டியனும்
வேற்று நாட்டிற் காசை தவ றென்று குலைந்தான்
தேளின் கொட்டுப் பட்டதிருடன்—வாயிழந்து
திரும்பியே ஓடும்நிலை தன்னை யடைந்தார்

சேரமன்னன் புறம் நாணியே—உணவொன்றும்
தீண்டாமல் நல்லுயிரைப் போக்கி மறைந்தான்
போரெனில் வெண்ணிப் போரெனக்—கவிஞர்கள்
போற்றக் கரி காலன் தனிச் சிறப்பெய்தினான்.



# தாடித் தாத்தா

தாடி நிண்ட தாத்தா
தடவி ஒருநாள் பார்த்தார்!
மாடப் புறு ரண்டு
மைனுப் பறவை ரண்டு
காடைக் குருவி ரண்டு
கரிக் குருவியும் ரண்டு
தாடிக்குள்ளே தங்கி
கூடு கட்டி அங்கு
மூடி ஒளிந்து கொண்டு
முட்டை யிட்டன ரண்டு!
தாடி நீண்ட தாத்தா
தடவி ஒருநாள் பார்த்தார்!




பொங்கலோ பொங்கல்!
பொங்குக இன்பம்! அன்பும் பொங்குக!
பொங்கலோ பொங்கல்!

பொங்கலிது பொங்கல்
புத்தமுதப் பொங்கல்
எங்கள் நன்றிப் பொங்கல்
இனிய மாட்டுப் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

மங்களம்சேர் பொங்கல்
வாழ்வுதரும் பொங்கல்
எங்கள் வாயில் கரும்பு
இனிக்க வரும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

பட்டியிலே பொங்கல்
பால்மணக்கும் பொங்கல்
எத்திசையும் இன்பம்
எங்கும் பொங்கும் பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!

## எழுந்திரு கண்ணே

எழுந்திரு கண்ணே எழுந்திரு
இன்னுமோ தூக்கம் எழுந்திரு
பொழுது விடிந்தது எழுந்திரு
புதுவாழ் வுறவே எழுந்திரு

இறைவனைத் தொழுதே எழுந்திரு
இளநகை செய்தே எழுந்திரு
உறுதியாய் ஓங்கவே எழுந்திரு
உயர்வெலாம் பெறவே எழுந்திரு.

## குட்டியின் தந்திரம்

அஞ்சு குள்ள நரிகள் ஓர்
 ஆட்டுக் குட்டியைக் கண்டன;
வஞ்ச மாகச் சூழ்ந்ததை
 மடக்கிக் கொல்ல முயன்றன.

நெஞ்சில் அச்சம் இன்றியே
 நின்று சொல்லும் குட்டியும்:
"கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்
 குச்சு நாய்கள் வருவதை—

கெஞ்சிக் கெஞ்சி நீங்களும்
 கேட்ட போதும் அவைவிடா;
கஞ்சிக் கழுகும் வயிற்றினைக்
 கடித்துக் கிழித்துக் கொல்லுமே.

தஞ்சம் என்னை அடைந்திடில்
 தயவாய்க் காப்பேன்" என்றதும்,
நஞ்சு காதில் புகுந்ததோ
 நடுங்கிக் குறுகித் துடித்துமே

பஞ்சு போல நரிகளும்
 பறந்து போகக் குட்டியும்
கொஞ்சிக் கொஞ்சிக் கூவியே
 குதித்துத் தாயை அடைந்ததே!

# நாட்டின் தந்தை காந்தி


தாய் :

இந்திய நாட்டின் தந்தை
என்ன சொன்னார் காந்தி ?
சிந்தனை செய்தே சொல்வாய் ;
திடமாய் மனதிற் கொள்வாய்.



குழந்தை :

காந்தித் தாத்தா சொன்னார்,
கடவுளைத் தொழவே சொன்னார்;
சாந்தம் அன்பும் சொன்னார்,
சத்தியம் பேசவே சொன்னார்.




ஜேய் ஹிந்த் ஜேய் ஹிந்த்
ஜெய ஜெய ஜெய ஜெய ஜேய் ஹிந்த்!

ஜெய ஜெய எனவே
அனைவரும் சேர்ந்தே
திசையெலாம் அதிரவே
தேசத்தை வாழ்த்துவோம்-ஜேய் ஹிந்த்!

பாரத நாடு
பழம்பெரு நாடு
பண்புகள் எல்லாம்
படைத்தநல் நாடு-ஜேய் ஹிந்த்!

வீரமும் சீலமும்
விளங்கிடும் நாடு
மேன்மைகள் எல்லாம்
ஓங்கிடும் நாடு-ஜேய் ஹிந்த்!